©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 52] CHENNAI, WEDNESDAY, DECEMBER 31, 2025
Margazhi 16, Visuvaavasu, Thiruvalluvar Aandu–2056

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

CONTENTS

| | Pages. |
|---|---|
| **வேளாண்மை – உழவர் நலத் துறை** | |
| Notification under the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act .. .. | 96-98 |
| **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை** | |
| [வருவாய் நிருவாகம் – மறுசீரமைப்பு – தருமபுரி மாவட்டம் – பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் – பாப்பிரெட்டிபட்டி மற்றும் தென்கரைக்கோட்டம் குறுவட்டங்களில் உள்ள சித்தேரி, எஸ்.அம்மாபாளையம், கொளகம்பட்டி, சின்னாங்குப்பம் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஆகிய 5 வருவாய் கிராமங்களை பாப்பிரெட்டிபட்டி வருவாய் வட்டத்திலிருந்து அரூர் வருவாய் வட்டத்தில் இணைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.] .. .. | 98-105 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வேளாண்மை – உழவர் நலத் துறை**

**Notifications under the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act.**

*[அரசாணை (நிலை) எண் 291, வேளாண்மை–உழவர் நல (வேவி2)த் துறை, 1 டிசம்பர் 2025, கார்த்திகை 15, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

No. II(1)/AGFFW/58/2025.

In exercise of the powers conferred by clause (d) of sub-section (1) of section 9 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby confirms the regulation of Agricultural Produces mentioned in column(3) of the TABLE below in the notified market areas specified in column(4) of the TABLE below. The intention to make such a declaration having been previously published with Agriculture Department's Notification No.II(1)/AG/60/2008, published at pages 108-114 of Part II – Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 24th December 2008, as required by section 3 of the said Act.

The Table.

| *Sl. No.* | *Name of the Market Committee.* | *Name of the Agricultural Produce.* | *Notified Market areas.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | Nilgiris | Arecanut (whole or splits). | 1. Uthagamandalam<br>2. Coonur<br>3. Kothagiri<br>4. Gudalur |
| 2. | Ramanathapuram | Cholam(Jowar),<br>Cumbu (Bajra),<br>Ragi,<br>Kudiraivali,<br>Tamarind(with or without skin and seeds),<br>Neem seeds. | 1. Ramanathapuram<br>2. Paramakudi<br>3. Kamuthi<br>4. Rajasingamangalam<br>5. Thiruvadanai<br>6. Mudukulathur |
| 3. | Dharmapuri | Arecanut (whole or splits) | 1. Dharmapuri<br>2. Harur<br>3. Pennagaram<br>4. Palacode<br>5. Pappireddipatti<br>6. Papparapatti<br>7. Kambainallur |
| 4. | Tiruchirappalli | Red gram(Thuvarai-whole),<br>Horse gram (Kollu),<br>Castor (Pods or Seeds),<br>Sunflower Seeds or Kernels,<br>Neem Seeds | 1. Tiruchirappalli<br>2. Manachanallur<br>3. Lalgudi<br>4. Pullampadi<br>5. Thuvarankurichi<br>6. Thuraiyur<br>7. Manapparai<br>8. Thottiyam<br>9. Thathaiyangarpet<br>10. Kattuputhur<br>11. Karur<br>12. Kulithalai<br>13. Irumputhipatti<br>14. Chinnatharapuram |

| *Sl. No.* | *Name of the Market Committee.* | *Name of the Agricultural Produce.* | *Notified Market areas.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 5 | Theni | Cotton seeds,<br>Cardamom,<br>Garlic | 1. Theni<br>2. Cumbum<br>3. Bodinayakanur<br>4. Chinnamanur<br>5. Andipatti<br>6. Uthamapalayam<br>7. Periayakulam |
| 6 | Coimbatore | Garlic | 1. Annur<br>2. Anaimalai<br>3. Coimbatore<br>4. Karamadai<br>5. Kinathukkadavu<br>6. Pollachi<br>7. Negamam<br>8. Malayadippalayam<br>9. Sulur<br>10. Thondamuthur |

V. DAKSHINAMOORTHY,
*Agricultural Production Commissioner and Secretary to Government.*

## அறிவிக்கை.

*[அரசாணை (நிலை) எண் 291, வேளாண்மை–உழவர் நல (வேவி2)த் துறை, 1 டிசம்பர் 2025, கார்த்திகை 15, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) பிரிவு 9 உட்பிரிவு (1) உட்கூறு (d)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் அட்டவணையின் நெடும்பத்தி(4)–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில், கீழ்க்காணும் அட்டவணையின் நெடும்பத்தி (3)–இல் குறிப்பிடப்பட்டுள்ள வேளாண்மை விளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்துவதாக இதனால் அறிவிக்கிறார். அத்தகைய அறிவிப்பை மேற்கொள்வதற்கான நோக்கம், மேற்சொன்ன சட்டத்தின் 3–ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு, 24.12.2008–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் – II, பிரிவு 1–இல் 108 முதல் 114 வரையிலான பக்கங்களில் வேளாண்மைத் துறையின் அறிவிக்கை எண்.II(1)/AG/60/2008 வாயிலாக ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

## அட்டவணை.

| *வ. எண்.* | *விற்பனைக் குழுவின் பெயர்.* | *வேளாண்மை விளைபொருளின் பெயர்.* | *அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகள்.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | நீலகிரி | பாக்கு (முழுமையானது அல்லது உடைக்கப்பட்டது) | 1. உதகமண்டலம்<br>2. குன்னூர்<br>3. கோத்தகிரி<br>4. கூடலூர் |
| 2. | இராமநாதபுரம் | சோளம் (Jowar)<br>கம்பு (Bajra)<br>கேழ்வரகு,<br>குதிரைவாலி,<br>புளி (தோல் மற்றும் விதைகளுடன் அல்லது இல்லாமல்),<br>வேப்ப விதைகள் | 1. இராமநாதபுரம்<br>2. பரமக்குடி<br>3. கமுதி<br>4. இராசசிங்கமங்கலம்<br>5. திருவாடானை<br>6. முதுகுளத்தூர |

| *வ. எண்.* | *விற்பனைக் குழுவின் பெயர்.* | *வேளாண்மை விளைபொருளின் பெயர்.* | *அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகள்.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 3. | தருமபுரி | பாக்கு (முழுமையானது அல்லது உடைக்கப்பட்டது) | 1. தருமபுரி<br>2. அரூர்<br>3. பென்னாகரம்<br>4. பாலக்கோடு<br>5. பாப்பிரெட்டிப்பட்டி<br>6. பாப்பாரப்பட்டி<br>7. கம்பைநல்லூர் |
| 4. | திருச்சிராப்பள்ளி | துவரம்பருப்பு (முழுத்துவரை) கொள்ளு, ஆமணக்கு (தோலோடு உள்ள அல்லது தோல் நீக்கப்பட்ட), சூரிய காந்தி விதைகள் அல்லது கொட்டைகள், வேப்ப விதைகள் | 1. திருச்சிராப்பள்ளி<br>2. மண்ணச்சநல்லூர்<br>3. லால்குடி<br>4. புள்ளம்பாடி<br>5. துவரங்குறிச்சி<br>6. துறையூர்<br>7. மணப்பாறை<br>8. தொட்டியம்<br>9. தாத்தையங்கார்பேட்டை<br>10. காட்டுப்புத்தூர்<br>11. கரூர்<br>12. குளித்தலை<br>13. இரும்பூதிப்பட்டி<br>14. சின்னதாராபுரம் |
| 5. | தேனி | பருத்தி விதைகள், ஏலக்காய், பூண்டு | 1. தேனி<br>2. கம்பம்<br>3. போடிநாயக்கனூர்<br>4. சின்னமனூர்<br>5. ஆண்டிப்பட்டி<br>6. உத்தமபாளையம்<br>7. பெரியகுளம் |
| 6. | கோயம்புத்தூர் | பூண்டு | 1. அன்னூர்<br>2. ஆனைமலை<br>3. கோயம்புத்தூர்<br>4. காரமடை<br>5. கிணத்துக்கடவு<br>6. பொள்ளாச்சி<br>7. நெகமம்<br>8. மலையடிப்பாளையம்<br>9. சூலூர்<br>10. தொண்டாமுத்தூர் |

**வ. தட்சிணாமூர்த்தி,**
*வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்*
*அரசுச் செயலாளர்.*

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

No. II(1)/REVDM/59/2025.

[வருவாய் நிருவாகம் – மறுசீரமைப்பு – தருமபுரி மாவட்டம் – பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் – பாப்பிரெட்டிபட்டி மற்றும் தென்கரைக்கோட்டம் குறுவட்டங்களில் உள்ள சித்தேரி, எஸ்.அம்மாபாளையம், கொளகம்பட்டி, சின்னாங்குப்பம் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஆகிய 5 வருவாய் கிராமங்களை பாப்பிரெட்டிபட்டி வருவாய் வட்டத்திலிருந்து அரூர் வருவாய் வட்டத்தில் இணைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.]

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–

*[அரசாணை (நிலை) எண் 954, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.–1(1) பிரிவு, 12 டிசம்பர் 2025, கார்த்திகை 26, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

படிக்கவும்:—

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண்.1923, நாள் 17.08.2025.
2. அரசுக் கடித எண் 14410/வ.நி—1(1)/2025—1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 19.08.2025.
3. தருமபுரி மாவட்ட ஆட்சியர், கடித எண். 24038/2025/அ5, நாள் 25.08.2025.
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். பணி—6(1)/01—04/367/2025, நாள் 29.10.2025.

**ஆணை: எண் 954, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வருவாய் நிருவாக அலகு, வ.நி.—1(1) பிரிவு, 12 டிசம்பர் 2025.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:—

“சித்தேரி ஊராட்சியில் இருக்கக்கூடிய 63 மலைகிராமங்களில் வசிக்கின்ற பழங்குடியின மக்களும், கொளகம்பட்டி, சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் வாழுகின்ற பொதுமக்களும், பல்வேறு பணிகளுக்கு பாப்பிரெட்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்வதற்கான தூரம் அதிகமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதனால், இந்த கிராமங்கள் எல்லாம் அருகாமையில் இருக்கின்ற அரூர் வருவாய் வட்டத்தில் இணைக்கப்படும்”.

2. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரிடம் உரிய கருத்துருவினை அனுப்புமாறு கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடிதத்தில், தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், சித்தேரி ஊராட்சியில் இருக்கக்கூடிய 63 மலைகிராமங்கள், கொளகம்பட்டி, சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் ஆகிய கிராமங்களை பாப்பிரெட்டிபட்டி வருவாய் வட்டத்திலிருந்து அரூர் வருவாய் வட்டத்தில் இணைப்பது தொடர்பாக மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தருமபுரி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்:—

i. தருமபுரி மாவட்டம், அரூர் வருவாய் கோட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் தற்போது 1) பாப்பிரெட்டிப்பட்டி, 2) தென்கரைக்கோட்டை, 3) பொம்மிடி மற்றும் 4) கடத்தூர் என 4 உள்வட்டங்கள் உள்ளன. மேற்கண்ட உள்வட்டங்களில் மொத்தம் 45 வருவாய் கிராமங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

**பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்**

| *வ. எண்.* | *உள்வட்டம்* | *மொத்த வருவாய் கிராமங்கள்* |
|---|---|---|
| 1. | பாப்பிரெட்டிப்பட்டி | 10 |
| 2. | தென்கரைக்கோட்டை | 12 |
| 3. | பொம்மிடி | 10 |
| 4. | கடத்தூர் | 13 |
| | **மொத்தம்** | **45** |

**பாப்பிரெட்டிப்பட்டி உள்வட்டத்தில் உள்ள வருவாய்க் கிராமங்கள்:-**

| *வ.எண்* | *உள்வட்டம்* | *வருவாய் கிராமங்கள்* |
|---|---|---|
| 1 | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டி |
| 2 | | வெங்கடசமுத்திரம் |
| 3 | | அதிகாரப்பட்டி |
| 4 | | அ.பள்ளிப்பட்டி |
| 5 | | இருளப்பட்டி |
| 6 | | எச்.புதுப்பட்டி |
| 7 | | பட்டுகோணம்பட்டி |
| 8 | | மஞ்சவாடி |
| 9 | | சித்தேரி |
| 10 | | எஸ்.அம்மாபாளையம் |

ii. சித்தேரி மற்றும் எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமங்களானது அரூர் வட்டத்திற்கு மிக அருகாமையில் அமைந்துள்ளதாகவும், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் சித்தேரி கிராமத்தினை சேர்ந்த பொதுமக்கள் அரூர் வழியாக சுமார் 46 கி.மீ. தூரமும் மற்றும் எஸ்.அம்மாபாளையம் கிராமத்தினை சேர்ந்த பொதுமக்கள் அரூர் வழியாக சென்றுவர சுமார் 82 கி.மீ. தூரமும் சுற்றி செல்லவேண்டும்.

iii. சித்தேரி மற்றும் எஸ்.அம்மாபாளையம் கிராமங்களிலிருந்து பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்வதற்குப் போதுமான போக்குவரத்து வசதி இல்லை. ஆனால், அரூர் வட்டத்திற்குச் செல்வதற்கு சாலை வசதியுடன் போக்குவரத்து வசதி உள்ளதாகவும், தற்போது சித்தேரி மற்றும் எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமங்களை அரூர் வட்டத்திற்கு மாற்றம் செய்வதால் பொதுமக்களுக்கு வட்டாட்சியர் அலுவலகம், வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் செல்வதற்கு போக்குவரத்து வசதி சுலபமானதாகவும், காலநேரம் விரயமாகுவது குறையும்.

iv. சித்தேரி வருவாய் கிராமத்திலிருந்து பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்றால், அரூர் வழியாக சென்று சுமார் 46 கி.மீ. தூரம் சுற்றி செல்ல வேண்டும். ஆனால், அரூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து சுமார் 26 கி.மீ. தொலைவிலும் மற்றும் அரூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து 26 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

v. எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமத்திலிருந்து பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்றால், அரூர் வழியாக சென்று சுமார் 82 கி.மீ. தூரம் சுற்றி செல்ல வேண்டும். ஆனால் அரூர் வட்டாட்சியர் அலுவலகம் சுமார் 60 கி.மீ. தொலைவிலும், அரூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் 60 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

vi. மேற்படி சித்தேரி வருவாய் கிராமத்தை பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மற்றும் உள்வட்டத்திலிருந்துப் பிரித்து அரூர் வட்டம், அரூர் உள்வட்டத்திலும், எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமத்தினை பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மற்றும் உள்வட்டத்திலிருந்து பிரித்து அரூர் வட்டம், தீர்த்தமலை உள்வட்டத்திலும் இணைக்கவும் பரிந்துரை செய்துள்ளார்.

vii. பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மற்றும் உள்வட்டம், சித்தேரி மற்றும் எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமங்களில் அமைந்துள்ள குக்கிராமங்களின் விவரங்கள்:—

| *சித்தேரி வருவாய்க் கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமங்களின் விவரம்* | | *எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமங்களின் விவரம்* | |
|---|---|---|---|
| *வ. எண்.* | *கிராமத்தின் பெயர்* | *வ. எண்* | *கிராமத்தின் பெயர்* |
| 01. | சித்தேரி | 01. | எஸ்.அம்மாபாளையம் |
| 02. | அ.நடுவளவு | 02. | கனவதாம்பட்டி |
| 03. | அக்கரைக்காடு | 03. | குள்ளம்பட்டி |
| 04. | அழகூர் | 04. | மாங்கடை |
| 05. | ஆலமரத்துவலவு | 05. | முல்லைநகர் |
| 06. | அரசநத்தம் | 06. | பழையசேலூர் |
| 07. | எலந்தகடை | 07. | புதுசேலூர் |
| 08 | சித்தேரி தாள்காடு | 08 | சண்முகாபுரம் |
| 09. | எருமைக்கடை | 09. | செங்காடு |
| 10. | கிணத்துவளவு | 10. | செங்காட்டுக்கொள்ளை |
| 11. | பாறைவளவு | 11. | ததுக்கனஅள்ளி |
| 12. | குண்டல்மடுவு | – | – |
| 13. | கோவிந்தன் கடை | – | – |
| 14. | குண்டம்பட்டி | – | – |
| 15. | ஜே.நடுவளவு | – | – |
| 16. | ஜொல்லூத்துக்கொட்டாய் | – | – |
| 17. | கலசப்பாடி | – | – |
| 18. | கல்நாடு | – | – |
| 19. | கருக்கம்பட்டி | – | – |
| 20. | மேல்மண்ணூர் | – | – |
| 21. | குணசேடு | – | – |
| 22. | மாம்பாறை | – | – |

| *சித்தேரி வருவாய்க் கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமங்களின் விவரம்* | | *எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமங்களின் விவரம்* | |
|---|---|---|---|
| *வ. எண்.* | *கிராமத்தின் பெயர்* | *வ. எண்* | *கிராமத்தின் பெயர்* |
| 23. | மண்ணூர் | – | – |
| 24. | மிதிகாடு | – | – |
| 25. | மோட்டுவளவு | – | – |
| 26. | மூலேரிக்காடு | – | – |
| 27. | முள்ளிக்காடு | – | – |
| 28. | நடுமண்ணூர் | – | – |
| 29. | நடுவளவு | – | – |
| 30. | நைனாவளவு | – | – |
| 31. | நடுக்கொள்ளை | – | – |
| 32. | நலமாங்கடை | – | – |
| 33. | நொச்சிக்குட்டை | – | – |
| 34. | ஊமத்தி | – | – |
| 35. | பேரேரி | – | – |
| 36. | பேரேரி புதூர் | – | – |
| 37. | புளியமரத்துவளவு | – | – |
| 38. | சக்கிலிதாம்பு | – | – |
| 39. | சக்கம்பட்டி | – | – |
| 40. | சோழக்காட்டு மெதுவு | – | – |
| 41. | சூலக்குறிச்சி | – | – |
| 42. | சூலக்குறிச்சி காட்டுவளவு | – | – |
| 43. | சூரியக்கடை | – | – |
| 44. | தேக்கல்பட்டி | – | – |
| 45. | தோல்தூக்கி | – | – |
| 46. | தொங்கலூத்து | – | – |
| 47. | துளசிக்காடு | – | – |
| 48. | வெள்ளிவளவு | – | – |
| 49. | வெளாம்பள்ளி | – | – |
| 50. | தரிசுக்காடு | – | – |
| 51. | மூலேரிக்காடு சிவபுரம் | – | – |

**பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் மற்றும் தென்கரைக்கோட்டை உள்வட்டத்தில் அமைந்துள்ள வருவாய் கிராமங்களின் விவரங்கள்:–**

| *வ.எண்* | *உள்வட்டம்* | *வருவாய் கிராமங்கள்* |
|---|---|---|
| 1 | தென்கரைக்கோட்டை | தென்கரைக்கோட்டை |
| 2 | | ஜம்மனஅள்ளி |
| 3 | | பேதாதம்பட்டி |
| 4 | | வாச்சாத்தி |
| 5 | | கொக்கராப்பட்டி |
| 6 | | நாரணாபுரம் |
| 7 | | பறையப்பட்டிபுதூர் |
| 8 | | இராமியணஅள்ளி |

| வ.எண் | உள்வட்டம் | வருவாய் கிராமங்கள் |
|---|---|---|
| 9 | | குருபரஅள்ளி |
| 10 | | கோபிச்செட்டிப்பாளையம் |
| 11 | | சின்னாங்குப்பம் |
| 12 | | கொளகம்பட்டி |

viii. **வருவாய் கிராமங்களை மற்றொரு உள்வட்டம் மற்றும் வருவாய் வட்டங்களுக்கு மாற்றம் செய்யப்படுவதால் ஏற்படும் சாதகம் மற்றும் பாதகங்கள்:–**

சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கொளகம்பட்டி கிராமங்களிலிருந்து பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு செல்வதற்குப் போதுமான போக்குவரத்து வசதி இல்லை. ஆனால், அரூர் வட்டத்திற்கு செல்வதற்கு சாலை வசதியுடன் போக்குவரத்து வசதியும் உள்ளது. தற்போது சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கொளகம்பட்டி வருவாய் கிராமங்களை அரூர் வட்டத்திற்கு மாற்றம் செய்வதால் பொதுமக்களுக்கு வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றுக்கான போக்குவரத்து வசதி எளிதாகவும், சென்றடைய சுலபமானதாகவும், கால நேரம் விரயமாகுவதும் குறையும்.

ix. சின்னாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் தென்கரைக்கோட்டை வழியாக சென்றுவர சுமார் 22 கி.மீ. தூரம் சுற்றி செல்ல வேண்டும். ஆனால் அரூர் வட்டாட்சியர் அலுவலகம் சுமார் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது மற்றும் போதிய பேருந்து வசதிகளும் இல்லை என்பதால் அக்கிராம மக்களுக்கு சென்றுவர சிரமமாக உள்ளது.

x. கோபிச்செட்டிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் தென்கரைக்கோட்டை வழியாக சென்றுவர சுமார் 16 கி.மீ. தூரம் சுற்றிச் செல்ல வேண்டும். ஆனால், அரூர் வட்டாட்சியர் அலுவலகம் சுமார் 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கடத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் 19 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

xi. கொளகம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் தென்கரைக்கோட்டை வழியாக சென்றுவர சுமார் 22 கி.மீ. தூரம் சுற்றி செல்ல வேண்டும். ஆனால், அரூர் வட்டாட்சியர் அலுவலகம் சுமார் 6 கி.மீ. தொலைவிலும், அரூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் 6 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

xii. சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கொளகம்பட்டி வருவாய் கிராமமானது தற்போது பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தென்கரைக்கோட்டை உள்வட்டத்தில் அமைந்துள்ளது. மேற்படி வருவாய் கிராமங்களை பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தென்கரைக்கோட்டை உள்வட்டத்திலிருந்து பிரித்து பொதுமக்களின் தேவைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில், அரூர் வட்டம், அரூர் உள்வட்டத்தில் சேர்க்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

xiii. பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தென்கரைக்கோட்டை உள்வட்டம், சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கொளகம்பட்டி வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமங்களின் விவரம்:–

| வ. எண் | சின்னாங்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமத்தின் பெயர் | கோபிசெட்டிப்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமத்தின் பெயர் | கொளகம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள குக்கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01. | சின்னாங்குப்பம் | கோபிச்செட்டிப்பாளையம் | கொளகம்பட்டி |
| 02. | நம்பிப்பட்டி | பெத்தூர் | ஆண்டிப்பட்டி |
| 03. | தேவராஜபாளையம் | பாப்பிசெட்டிப்பட்டி | ஒட்டர்பாளையம் |
| 04. | கோபிநாதம்பட்டி | அள்ளாலப்பட்டி | பாரதிபுரம் |
| 05 | – | அண்ணாமலைப்பட்டி | வாழைத்தோட்டம் |
| 06 | – | டி.துறிஞ்சிஅள்ளி | பாப்பாரப்பட்டி |
| 07 | – | கதவனம்பட்டி | வரிசைப்பட்டி |
| 08 | – | சிக்கம்பட்டி | எருக்கம்பட்டி |
| 09 | – | – | மங்கானேரி |
| 10 | – | – | ஆண்டிப்பட்டி புதூர் |

xiv. அரூர் வட்டத்துடன் இணைக்கப்பட உள்ள பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் உள்ள ஐந்து கிராமத்தில், 1.சித்தேரி, 2.எஸ். அம்மாபாளையம் ஆகிய இரு வருவாய் கிராமங்கள் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்தியத்துக்கு உட்பட்டும், கோபிசெட்டிப்பாளையம் என்ற ஒரு வருவாய் கிராமம் மட்டும் கடத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்டும், சின்னாங்குப்பம் மற்றும் கொளகம்பட்டி ஆகிய இரு வருவாய் கிராமங்கள் அரூர் ஒன்றியத்துக்கும் உட்பட்டும் உள்ளது எனவும், மேற்கண்ட ஐந்து வருவாய் கிராமங்களை அரூர் வட்டத்துடன் இணைத்திட மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

**ஊராட்சித் தீர்மானம்:-**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலிருந்து, 1) சித்தேரி கிராமம், 2) எஸ். அம்மாபளையம், 3) கோபிசெட்டிப்பாளையம், 4) கொளகம்பட்டி மற்றும் 5) சின்னாங்குப்பம் அரூர் வட்டத்திற்கு மாற்றம் செய்வதற்கு தொடர்புடைய ஊராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தீர்மான நகல்கள் வரப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை அறிக்கை:-**

xv. ஊர்ப்பொதுமக்களின் நீண்டக்காலக் கோரிக்கையின் பேரில், மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, அரூர் வருவாய்க் கோட்ட அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில், 1) சித்தேரி, 2) எஸ்.அம்மாபாளையம், 3) சின்னாங்குப்பம், 4) கோபிசெட்டிப்பாளையம், மற்றும் 5) கொளகம்பட்டி ஆகிய கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள் வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் இதர அலுவலகங்களுக்கு சென்று வர பயண தூரம் அதிகமாக உள்ளதாகவும், போக்குவரத்து வசதி சிரமமாக உள்ளதைக் கருத்திற்கொண்டும், தொடர்புடைய ஊராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

xvi. பொதுமக்கள் வசிக்கும் இடத்திலிருந்து வருவாய்த்துறைச் சான்றுகள் பெறவும், மனுக்கள் அளிக்கவும் மற்றும் இதரக் கோரிக்கைகளுக்காகவும் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் இதர அலுவலகங்களுக்கு பாப்பிரெட்டிப்பட்டிக்கு சென்றுவர பயண தூரம் அதிகமாக உள்ளதாலும், போக்குவரத்து வசதி சிரமமாக உள்ளதைக் கருத்திற்கொண்டும், தொடர்புடைய ஊராட்சிகளில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாலும், மேற்படி ஐந்து வருவாய் கிராமங்களை பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலிருந்து பிரித்து, அரூர் வட்டத்துடன் பின்வருமாறு சேர்க்க மாவட்ட ஆட்சியர் பரிந்துரைச் செய்துள்ளார்.

**வருவாய் கிராமங்கள் பிரிக்கப்படும் முன் மற்றும் பிரிக்கப்பட்ட பின் அமையவுள்ள வட்டம் மற்றும் உள்வட்டங்களின் விவரங்கள்:-**

| *வ. எண்.* | *கிராமங்கள் தற்போது அமைந்திருக்கும் உள்வட்டம் மற்றும் வட்டம் குறித்த விவரம்* | | | *கிராமங்கள் இணைக்க பரிந்துரைக்கப்படும் உள்வட்டம் மற்றும் வட்டம் குறித்த விவரம்* | |
|---|---|---|---|---|---|
| | *கிராம எண் மற்றும் வருவாய் கிராமம்* | *உள்வட்டம்* | *வட்டம்* | *உள்வட்டம்* | *வட்டம்* |
| 1. | 94. சித்தேரி | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |
| 2. | 97. எஸ்.அம்மாபளையம் | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டி | தீர்த்தமலை | அரூர் |
| 3. | 79.சின்னாங்குப்பம் | தென்கரைக்கோட்டை | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |
| 4. | 71.கோபிசெட்டிப்பாளையம் | தென்கரைக்கோட்டை | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |
| 5. | 77.கொளகம்பட்டி | தென்கரைக்கோட்டை | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |

xvii. தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலிலுள்ள சித்தேரி, எஸ்.அம்மாபளையம், கோபிசெட்டிபாளைம், கொளகம்பட்டி மற்றும் சின்னாங்குப்பம் ஆகிய வருவாய் கிராமங்களில் பணிபுரியும் கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் (Special Time Scale Pay) கிராம உதவியாளர்கள் அரூர் வட்டத்திற்கு மாற்றம் செய்யும் நேர்வில் ஊதியம் வழங்கும் அலுவலராக அரூர் வட்டாட்சியருக்கு அனுமதி வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் அரசிற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

xviii. மேற்படி, ஐந்து வருவாய் கிராமங்களை பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலிருந்து பிரித்து சித்தேரி, சின்னாங்குப்பம், கோபிசெட்டிபாளையம் மற்றும் கொளகம்பட்டி வருவாய் கிராமங்களை அரூர் வட்டம், அரூர் உள்வட்டத்தில் இணைத்தும், எஞ்சியுள்ள எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமத்தினை மட்டும் அரூர் வட்டம், தீர்த்தமலை உள்வட்டத்தில் இணைக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தருமபுரி மாவட்டம் ஆகியோரின் கருத்துருக்களை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்கண்டவாறு அமையும் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது:—

i. தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், பாப்பிரெட்டிப்பட்டி குறுவட்டத்தில் உள்ள சித்தேரி, எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமங்கள் மற்றும் தென்கரைக்கோட்டை குறுவட்டத்தில் உள்ள சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கொளகம்பட்டி வருவாய் கிராமங்கள் ஆகியவற்றை சேர்த்து மொத்தம் 5 வருவாய் கிராமங்களை பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திலிருந்து பிரித்து, சித்தேரி, சின்னாங்குப்பம், கோபிசெட்டிபாளையம் மற்றும் கொளகம்பட்டி

வருவாய் கிராமங்களை அரூர் வட்டம், அரூர் குறுவட்டத்தில் இணைத்தும், எஞ்சியுள்ள எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமத்தினை மட்டும் அரூர் வட்டம், தீர்த்தமலை உள்வட்டத்தில் கீழ்க்கண்டவாறு இணைக்கப்படுகிறது:—

| வ. எண். | *கிராமங்கள் தற்போது அமைந்திருக்கும் உள்வட்டம் மற்றும் வட்டம் குறித்த விவரம்* | | | *கிராமங்கள் இணைக்க பரிந்துரைக்கப்படும் உள்வட்டம் மற்றும் வட்டம் குறித்த விவரம்* | |
|---|---|---|---|---|---|
| | *கிராம எண் மற்றும் வருவாய் கிராமம்* | *உள்வட்டம்* | *வட்டம்* | *உள்வட்டம்* | *வட்டம்* |
| 1. | 94. சித்தேரி | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |
| 2. | 97.எஸ்.அம்மாபளையம் | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டி | தீர்த்தமலை | அரூர் |
| 3. | 79.சின்னாங்குப்பம் | தென்கரைக்கோட்டை | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |
| 4. | 71.கோபிசெட்டிப்பாளையம் | தென்கரைக்கோட்டை | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |
| 5. | 77.கொளகம்பட்டி | தென்கரைக்கோட்டை | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | அரூர் |

ii. சித்தேரி,எஸ்.அம்மாபாளையம், சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கொளகம்பட்டி ஆகிய ஐந்து வருவாய் கிராமங்களின் ஆட்சி எல்லை விவரங்கள் பிற்சேர்க்கையில் உள்ளவாறு அமையும்.

5. சித்தேரி, எஸ்.அம்மாபாளையம், சின்னாங்குப்பம், கோபிசெட்டிப்பாளையம் மற்றும் கொளகம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட கிராம நிருவாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் பணியிடங்கள் பாப்பிரெட்டிபட்டி வருவாய் வட்டத்திலிருந்து அரூர் வருவாய் வட்டத்திற்கு மாற்றம் செய்யும்பொழுது, அப்பணியிடங்களுக்கு சம்பளம் பெற்று வழங்கும் அலுவலரின் குறியீட்டில் (DDO Code) ஏற்படும் மாற்றங்களை காலதாமதமின்றி உரிய முறையில் ஊதியம் பெற நிதித்துறையில் வெளியிடப்பட்ட அரசு கடித எண் E.1628150/ ஊ.பி/2024—1, நாள் 14.05.2024—இல் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி களஞ்சியம் இணையதளத்தில் பணியிடங்களை மாற்றம் செய்யுமாறு கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு அறிவுறுத்தப்படுகிறது.

6. புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பது குறித்த முன்மொழிவுகள் தேவைப்படின் தனியே பரிசீலிக்கப்படும்.

7. இவ்வரசாணை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும்.

8. வருவாய் வட்டங்களில் மறுபரவலமர்த்தல் மூலம் சீரமைப்பது குறித்து மேலே பத்தி 4—இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர், தருமபுரி ஆகியோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இந்த அரசாணை நிதித்துறையின் இ.கோ.எண்.14410/நிதி(வருவாய்)/2025, நாள் 12.12.2025—இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**பிற்சேர்க்கை**

அரூர் வட்டம், அரூர் உள்வட்டத்தில், சித்தேரி, சின்னாங்குப்பம், கோபிசெட்டிபாளையம் மற்றும் கொளகம்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களையும் மற்றும் தீர்த்தமலை உள்வட்டத்தில், எஸ்.அம்மாபாளையம் வருவாய் கிராமத்தையும் இணைக்கப்பட்டபின் ஆட்சி எல்லை பட்டியல் விவரங்கள்:—

| *வ. எண்.* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *வருவாய் கிராமங்களின் விவரம்* | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தலைமையிடம் | சித்தேரி | எஸ்.அம்மாபாளையம் | சின்னாங்குப்பம் | கோபிசெட்டிப் பாளையம் | கொளகம்பட்டி |
| 2. | வருவாய் வட்டத்தின் பெயர் | அரூர் | அரூர் | அரூர் | அரூர் | அரூர் |
| 3. | குறுவட்டத்தின் பெயர் | அரூர் | தீர்த்தமலை | அரூர் | அரூர் | அரூர் |
| 4. | ஒன்றியத்தின் பெயர் | பாப்பிரெட்டிப்பட்டி | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் | கடத்தூர் | அரூர் |
| 5. | ஊராட்சியின் பெயர் | சித்தேரி | சித்தேரி | சின்னாங்குப்பம் | கோபிசெட்டிப் பாளையம் | கொளகம்பட்டி |
| 5. | சட்டமன்றத் தொகுதி | அரூர் | அரூர் | அரூர் | பாப்பிரெட்டிப்பட்டி | அரூர் |
| 6. | பாராளுமன்றத் தொகுதி | தருமபுரி | தருமபுரி | தருமபுரி | தருமபுரி | தருமபுரி |

| *வ. எண்.* | *ஆட்சி எல்லை விவரங்கள்* | *வருவாய் கிராமங்களின் விவரம்* | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7. | மொத்தப் புல எண்கள் | 1 முதல் 665 வரை | 1 முதல் 131 வரை | 1 முதல் 155 வரை | 1 முதல் 443 வரை | 1 முதல் 197 வரை |
| 8. | கிராமத்தின் பரப்பளவு | புன்செய்– 1485.02 ஹெக். நன்செய்–இல்லை அரசு புறம்போக்கு நிலங்கள்–158.04.02 ஹெக். தீ.ஏ.த.–354.79.46 ஹெக். | புன்செய்–255.38.5 ஹெக். நன்செய்–இல்லை அரசு புறம்போக்கு நிலங்கள்–50.18.5 ஹெக். தீ.ஏ.த.–4.78.5 ஹெக். புன்செய் தரிசு – 51.91.5 ஹெக். | புன்செய்– 1116. 58.5 ஹெக். நன்செய்– 112.51.0 ஹெக். அரசு புறம்போக்கு நிலங்கள்– 160.53.5 ஹெக். மொத்த பரப்பு– 1389.63.0 ஹெக் | புன்செய்–1285.02.5 ஹெக். நன்செய்–27.00.0 ஹெக் அரசுப் புறம்போக்கு நிலங்கள்–162.46.50 ஹெக். மொத்தப்பரப்பு – 1474.49.0 ஹெக். | புன்செய்– 659. 38.0 ஹெக். நன்செய்–38. 92.5 ஹெக். அரசுப் புறம்போக்கு நிலங்கள்– 87.18.0 ஹெக். மொத்தப்பரப்பு– 785.48.5 ஹெக். |
| 9. | மக்கள்தொகை விவரம் (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி) | 8,585 | 1,679 | 5,833 | 4,535 | 3,375 |

**பெ. அமுதா,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU